Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 5/2026**

வழக்கு சாட்சி எண். PW3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சதிஷ்குமார் | கிராமம் | : | தீர்த்தமலை |
| தந்தை பெயர் | : | பொன்னுசாமி | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 40 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரி சிறையிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். ).

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th** Day of **March 2026.**

**முதல் விசாரணை**

நான் தீர்த்தமலையில் வசித்துக்கொண்டு சலூன் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். அசா1 எனது பெரியப்பா. கடந்த 27.12.2025ம் தேதி இரவு சுமார் 10.30 மணிக்கு மேல் இருக்கும். அசா1 எனக்கு போன் செய்து அன்றைய தினம் இரவு சுமார் 10 மணியளவில் இரவில் தான் இயற்கை உபாதை கழித்துவிட்டு வீட்டிற்குள் வந்தபோது இரண்டு நபர்கள் வாயை பொத்தி கையை பிடித்து இழுத்து வீட்டிற்குள் தள்ளி கதவை சாத்தி அசா1 அணிந்திருந்த நகையை பறித்து சென்றுவிட்டதாக தகவல் தெரிவித்தார். நான் உடனே அசா1ன் வீட்டிற்கு சென்று அசா1 மற்றும் அசா2 ஐ

பார்த்தேன். அசா2ற்கு வாயில் ரத்தம் வந்துகொண்டிருந்தது. நான் உடனே 108ற்கு போன் செய்து அசா2 ஐ அரூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் அசா1 புகார் கொடுக்க நான் அவருக்கு உதவியாக இருந்தேன். பின்னர் நகைகள் கிடைத்துவிட்டதாக போலீசார் தகவல் தெரிவித்தார்கள். தாலி செயின் கிடைக்கவில்லை என்றும் தங்க காசுகள் கிடைத்துவிட்டதாகவும் அசா1 என்னிடம் கூறினார்.

வழக்கு தொடர்ந்த போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(எதிரி தரப்பில் இருந்து இலவச சட்ட உதவிகள் மூலம் நியமனம் செய்யப்பட்ட வழக்கறிஞர் திரு. K.குமரவேல் என்பவர் ஆஜர் ஆகாத படியாலும் அவரது தொலைபேசி எண்ணான 9488390921 என்ற எண்ணிற்கு நீதிமன்றத்திலிருந்து தொலைபேசியிலிருந்து தொடர்பு கொண்டு அழைப்பை எடுக்காததாலும், நீதிமன்றத்தால் நியமனம் செய்யப்படவிருந்த Amicus curiae யை எதிரி மறுத்துவிட்டதாலும் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தேதி ஒத்திவைக்கப்படாமல் முடித்து வைக்கப்படுகிறது.)

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**